DEPOSITION OF WITNESS
Chapter XXIII code of Criminal Procedure
**IN THE COURT OF SESSIONS JUDGE, NAGAPATTINAM.**

**Sessions Case No. 47/2015**

**Deposition of Witness for Prosecution : P.W. 3**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கணேசன் | தகப்பனார்/கணவர் பெயர் | : | |
| ஊர் | : | | தாலுக்கா | : | |
| ஜாதி | : | | வயது | : | |
| மதம் | : | | தொழில் | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 day of 28.07.2023

**முதல் விசாரணை**

நான் செண்பகராயநல்லூரில் வசித்து வருகிறேன். அடிப்பட்ட லெனின் எனது மகன். என் மகன் அடிப்பட்டது சம்பந்தமாக எனக்கு எதுவும தெரியாது. எனது மகன் அடிப்பட்ட மறுநாள் அவர் கொலை செய்யப்பட்டார் என்று கேள்விபட்டேன். யார் செய்தார்கள் என்று தெரியாது. எனது மகனுக்கு என்ன நடந்தது என்று தெரியாது. சம்பவ தேதி எனக்கு ஞாபகமில்லை. இந்த வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. என்னை ஆய்வாளர் விசாரிக்கவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கும் படி கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டினார். ஆவணங்கள் ஆய்வு செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது)

அரசு தரப்பு குறுக்கு விசாரணை

என்னை ஆய்வாளர் விசாரிக்கும்போது, 16.02.2007-ம் தேதி லெனின், அவரது மனைவியை அழைத்துகொண்டு டாடா சுமோவில் திருத்துறைபூண்டி ஆஸ்பத்திரிக்கு சென்றான் என்றும், மாலை 06.30 மணி அளவில் அவர் மாமானார் வீட்டு அருகில் வரும்போது, ராஜசிம்மன் மற்றும் கூலிபடையினர் அவர்கள் கொண்டு வந்த வாகனத்தை டாடா சுமோவுடன் மோதிவிட்டு, ராஜசிம்மனுடன் வந்தவர்கள் காரின் கண்ணாடியை அடித்து நொறுக்கி சேதப்படுத்தி டாடா சுமோவின் டிரைவரான எனது மகனை பின் மண்டையில் தாக்கியதால் அவருக்கு ரத்த காயம் ஏற்பட்டு திருத்துறைபூண்டி அரசு மருத்துவமனையில் சேர்த்தார்கள் என்றும், கிருஷ்ண கவுண்டர் எடுத்துட்டு தென்புற ரோட்டில் சேதப்படுத்தப்பட்ட டாடா சுமோவின் கண்ணாடி துண்டுகள் சிதறி கிடந்தன என்றும், மைத்துனர் ராமசாமி என் மகனை திருத்துறைபூண்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றும், உண்மை விவரத்தை போலீசாரிடம் வாக்குமூலமாக அளித்துவிட்டு தற்போது வழக்கும் சம்பவம் தெரியாது என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை (எதிரிகள் தரப்பில்)</u>

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.